# தேவன் நடுநிலை தவறாதவராக இருக்கிறாரா?

## [9:14-29]

*"அது நியாயமானதல்ல!"* [என்ற] *அந்த வார்த்தைகளை நீங்கள் எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா? அவைகள் மகிழ்ச்சியற்ற பிள்ளைகளாலும் ஏமாற்றம் அடைந்த இளம்வயதினராலும் பேசப்பட்டதை நான் கேட்டிருக்கிறேன், ஆனால் அவைகள் தாங்கள் பெற்றுக்கொள்ளத் தகுதியானவற்றைப் பெறா திருந்ததாக நினைத்த வயதுவந்தவர்களாலும்கூட பேசப்பட்டுள்ளன. இதைப் போன்ற உணர்வுகளைக் கர்த்தரைப் பொறுத்தமட்டில்கூட மக்கள் வெளிப் படுத்தியுள்ளதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்: "நான் ஒரு மோசமான நபரல்ல. நான் மற்றவர்களுக்கு உதவ விரும்புகிறேன். இருப்பினும், இது எனக்கு நடக்கும்படித் தேவன் அனுமதித்தார். இது நியாயமானதல்ல!"*

தேவன் நியாயமானவராக *இருக்கிறாரா?* இதுவே நமது வசனப் பகுதியில் பவுல் பதில்விளக்கம் தரும் கேள்வியாக உள்ளது. 14ம் வசனத்தில் அவர், "தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லலாமா?" என்று கேட்டார். NCV வேதாகமம் இந்தக் கேள்வியை, நம்மில் சிலர் கேட்பது போன்று பின்வருமாறு கேட்கிறது: "தேவன் நியாயமற்றவராக இருக்கிறாரா?" சில இஸ்ரவேலர்களை (இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தவர்களை)த் தேர்ந்துகொண்டதும் மற்றவர்களை (விசுவாசியாதிருந்தவர்களை) புறக்கணித்ததும் தேவனுக்கு நியாய மாக இருந்ததா இல்லையா என்பது இந்த விசாரணைக்குப் பின்னணியானதாக இருந்தது. (விசுவாசியாதிருந்த) இஸ்ரவேல் மக்களைப் புறக்கணித்ததும் (விசுவா சித்திருந்த) புறஜாதியாரை ஏற்றுக்கொண்டது தேவனுக்கு நியாயமாயிருந்ததா என்பது இதைக் கேட்பதற்கான இன்னொரு வழியாக உள்ளது. 14ம் வசனத்தின் வார்த்தைகளைப் பவுல் எழுதியபோது, அவர் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைத் தமது சிந்தையில் கொண்டிருந்தார்; ஆனால் இந்தக் கேள்வி மிகவும் பரவலான நடைமுறைப் பயன்பாட்டைக் கொண்டிருந்தது. தேவன் தமது செய்கைகள் எல்லாவற்றிலும் நியாயமானவராக இருக்கிறாரா? அவர் எப்போதுமே நம்மை நியாயமாக நடத்துவாரா?

9:14-29ல், பவுல் தேவனுடைய தெரிவுகள் *சீர்பொருத்தமானவைகளாக* இருப்பதால், அவர் நியாயமானவராகவே இருக்கிறார் என்பதைப் பவுல் வலியுறுத்தினார். அவைகள் அவரது செயல்முறை, நபர்த்துவம் மற்றும் நோக்கம் ஆகியவற்றுடன் சீர்பொருத்தமானவைகளாக உள்ளன.

## அவரது செயல்முறையுடன் சீர்பொருத்தமாயிருத்தல் (9:14-18)

*9:1-13ல், பவுல் தேவன் ஏற்படுத்தியிருந்த தெரிந்துகொள்ளுதல்களைப் பற்றிப் பேசினார். கர்த்தர் ஈசாக்கைத் தேர்ந்துகொண்டு, இஸ்மவேலைப் புறக்கணித்தார் (வசனங்கள் 7ஆ-9); அவர் யாக்கோபைத் தேர்ந்துகொண்டு, ஏசாவைப் புறக்கணித்தார் (வசனங்கள் 10-13). பவுல், "ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்?" என்று கேட்டார் (வசனம் 14அ). அதாவது, "கடந்தகாலத்தில் தேவன் ஏற்படுத்தியிருந்த தெரிவுகளைப் பற்றி நாம் என்ன சொல்லுவோம்?" கலந்துரையாடலின் இவ்விடத்தில், பவுல் நமது தற்போதய பாடம் மையங் கொண்டுள்ள கேள்வியைக் கேட்டார்: "தேவனிடத்தில் அநீதி உண்டென்று சொல்லலாமா?'' (வசனம் 14ஆ). தேவன் அநீதியுள்ளவராக இருப்பார் என்ற ஆலோசனையேகூட பவுலுக்குத் தொந்தரவு உண்டாக்குவதாக இருந்தது. அவர் விரைவாக, "சொல்லக்கூடாதே'' என்ற பலத்த மறுப்பைக் கூட்டினார் (வசனம் 14இ).*

இஸ்மவேலை விட்டு ஈசாக்கைத் தேர்ந்துகொண்டது அல்லது ஏசாவை விட்டு யாக்கோபைத் தேர்ந்துகொண்டது என்பது தேவனுக்கு நியாயமற்றது என்று எந்த ஒரு யூதரும் நினைக்கமாட்டார். பவுல் பின்வரும் முடிவுக்கு ஒரு பின்னணியை இட்டுக்கொண்டிருந்தார்: *அந்த முடிவுகளை மேற்கொள்ளும்போது தேவன் நியாயமானவராக இருந்திருந்தால், விசுவாசியாத யூதர்களை விட்டு, விசுவாசித்த யூதர்களைத் தேர்ந்துகொள்ளும்போதும் அவர் நியாயமானவராகவே இருந் திருப்பார். மற்றும், அவர் அவிசுவாசியான யூதர்களை விட்டு, விசுவாசிகளான புறஜாதிகளைத் தேர்ந்துகொண்டதிலும் நியாயமானவராகவே இருந்தார்.*

### இரக்கம்: தெய்வீக ஏற்றுக்கொள்ளுதல் (வசனங்கள் 15, 16)

பவுல் ஈசாக்கையும் யாக்கோபையும் தேவன் தேர்ந்துகொள்ளுதல் என்பதை விட்டு, யூத வாசகர் ஒவ்வொருவருக்கும் நன்கு பழக்கமான வேதாகமரீதியான மற்ற இரு நிகழ்வுகளுக்குக் கடந்து சென்றார். இவை இரண்டுமே எகிப்தி லிருந்து புறப்பட்டு வந்த வனாந்தரப் பிரயாணத்தின்போது நடந்தவை ஆகும். முதலாவது நிகழ்வானது வனாந்தரத்தில் மோசேயையும் இஸ்ரவேல் மக்களையும் உள்ளடக்குகிறது: "அவர்[தேவன்] மோசேயை நோக்கி: 'எவன்மேல் இரக்கமா யிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன்[1] என்றார்' " (வசனம் 15). யாத்திராகமம் 33:19ல் இருந்து இந்த மேற்கோள் வருகிறது. இது பொன் கன்றுக்குட்டி நிகழ்வைத் தொடர்ந்து மோசேக்கும் கர்த்தருக்குமிடையில் நடைபெற்ற உரையாடலின் பகுதியாக உள்ளது. தேவனு டைய வார்த்தைகள், "எனது இரக்கத்தையும் உருக்கத்தையும் பெறுவது யார் என்பதை *நானே* முடிவு செய்வேன்" என்று அர்த்தப்படுகின்றன.

அந்தக் கூற்றிலிருந்து, பவுல் பின்வரும் முடிவை அடைந்தார்: ''ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோமர் 9:16). "ஓடுகிறவன்" என்பது கிரேக்க வசனத்தின் நேரடியான மொழிபெயர்ப்பாக உள்ளது. பவுல் ஒரு ஓட்டப் பந்தயத்தில் வெற்றிபெறத் தன்னால் முடிந்த எல்லாவற்றையும் செய்கிற ஒரு

மனிதனுடைய ஒப்புவமையைப் பயன்படுத்தினார். AB வேதாகமம், [“strenuous exertion as in running a race”] “ஒரு பந்தயத்தில் ஓடுவதில் போன்று கடுமையாய்த் தீவிர முயற்சி” என்று குறிப்பிடுகிறது. 16ம் வசனத்தை நாம் பின்வருமாறு பொழிப்புரைப்படுத்தலாம்: “எனவே கிருபையை (“சித்தங்களை”) ஊக்கமாய் விரும்பித் தேடுகிற மனிதனாலோ அல்லது இரக்கம் பெறுவதற்கு மாபெரும் முயற்சி செய்கிற (“ஓடுகிற”) மனிதனாலோ அல்ல. மாறாக, யார் இரக்கத்தைப் பெற்றுக்கொள்வார் என்பது தேவனைப் பொறுத்த விஷயமாக உள்ளது.”

பவுலின் கூற்றானது பின்வருவது போன்ற ஒரு பதிலுரையைத் தூண்டியிருக்கலாம்: “ஆனால் நாம் உறுதியாகவே இரக்கத்தை விரும்பிநாட வேண்டும், மற்றும் நாம் உறுதியாகவே இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள நம்மால் முடிந்தவற்றைச் செய்யவேண்டுமே.” அது உண்மையாகவே உள்ளது, ஆனால் அந்த விருப்பமும் முயற்சியும் இரக்கத்தை உத்தரவாதப்படுத்துவதில்லை என்று பவுல் நிலைநாட்டினார். விரும்புதலும் உழைத்தலும் தேவனை நமக்குக் கடனாளியாக்குவதில்லை. யார்மீது தேவன் இரக்கத்தை பொழிவார் என்பதை முடிவு செய்தல் அவரது உரிமையாக உள்ளது.

வனாந்தரத்திலிருந்த இஸ்ரவேல் மக்கள் ஒரு நல்ல உதாரணமாக இருக்கின்றனர். யாத்திராகமத்தினுடைய மேற்கோளின் சந்தர்ப்பப்பொருளில், மோசே இஸ்ரவேல் மக்களுக்காகத் தேவனிடத்தில் வேண்டுகோள் விடுத்து, அவர்களை மன்னிக்கும்படி இறைஞ்சினார் (யாத்திராகமம் 32:31, 32அ) மற்றும் அவர்களோடு தொடர்ந்து இருக்கும்படித் தேவனைக் கேட்டுக்கொண்டார் (33:15). இரக்கத்தின் இந்த வெளிப்பாடுகளுக்கு இஸ்ரவேல் மக்கள் *தகுதியானவர்களாக இருந்தனரா?* இல்லை, ஆனால் அந்த வேளையில் அவர்கள்மீது இரக்கம் நிறைந்திருக்கத் தேவன் தேர்ந்துகொண்டார். பவுலின் யூத வாசகர்கள், தங்கள் முன்னோர்களிடத்தில் இரக்கத்தை நீட்டித்ததில் தேவன் *நடுவுநிலையுள்ளவராக* இருந்தார் என்று நம்புவார்களா? ஆம் நம்புவார்களே.

**கடினப்படுதல்: தெய்வீக புறக்கணிப்பு (வசனங்கள் 17, 18)**

17ம் வசனத்தில் பவுல், [வனாந்தர] யாத்திரைக்கு முந்திய நிகழ்ச்சிகளின் காலத்திற்குள் பின்னோக்கிக் கடந்து சென்றார்: “ ‘மேலும் என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என்னுடைய நாமம் பூமியில் எங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும்,’ உன்னை நிலைநிறுத்தினேன் என்று பார்வோனுடனே சொன்னதாக வேதத்தில் சொல்லி[2]யிருக்கிறது.”[3] இந்த மேற்கோள் யாத்திராகமம் 9ல் இருந்து வருகிறது. ஆறாம் வாதைக்கும் (எரிகொப்புளங்கள்) ஏழாம் வாதைக்கும் (கல்மழை) இடையில், பார்வோனிடத்தில் ஒரு செய்தியைத் தெரிவிக்கும்படி தேவன் மோசேயை அனுப்பினார். தேவன், பார்வோனையும் சகல எகிப்தியரையும் தாம் அழித்திருக்க முடியும் என்று மோசேயின் மூலமாகக் கூறினார். “ஆனால்,” “என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன் [நேரடியான அர்த்தத்தில், “நிற்கவும்”[4]], என்று அவர் கூறினார்” (யாத்திராகமம் 9:16). யாத்திராகமத்திலுள்ள வசனத்திற்கும் பவுலின் மேற்கோளுக்குமிடையில் சற்றே வேறுபாடு உள்ளது. பவுல், “உன்னை [அரசனாயிருக்கும்படி] நிலைநிறுத்தினேன்” என்று கூறினார், அதேவேளையில் பழைய ஏற்பாட்டு வேதவசனத்தில், “உன்னை [அரசனாயிருக்க

அனுமதித்து] நிலைநிறுத்தினேன்" என்றுள்ளது. இவ்விரு வசனங்களுமே,தேவன் மக்களினங்களின் முடிவைக் கட்டுப்படுத்துகிறார் என்று வலியுறுத்துகின்றன.

"என் ஜனங்களைப் போகவிடவேண்டும்" (யாத்திராகமம் 5:1) என்ற தெய்வீக ஆணைக்குப் பார்வோன் எவ்விதத்தில் பதில்செயல் செய்தான் என்பதைப் பொருட்படுத்தாமல், தேவனுடைய நோக்கம் நிறைவேறியிருக்கும் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும். பார்வோன் கீழ்ப்படிந்திருந்தால், இஸ்ரவேலின் தேவனுடைய வற்புறுத்துதல்களுக்கு, வல்லமையுள்ள எகிப்தின் அரசன் கீழ்ப்படிந்திருந்தான் என்ற செய்தி பரவியிருக்கும். அதன் விளைவாக தேவனுடைய வல்லமையானது செயல்விளக்கப்படுத்தப்பட்டு, அவரது நாமம் பூமியெங்கும் அறிவிக்கப்பட்டிருக்கும். பார்வோன் மறுதலித்து, அதன் விளைவாகப் பத்து வாதைகளும் அதைத்தொடர்ந்து வனாந்தரப் பிரயாணமும், செங்கடலைக் கடத்தலும், எகிப்தியப் படைகளை அழித்ததும் ஏற்பட்டன. இந்த வல்லமையுள்ள செயல்கள் வெகுதூரத்திலும் பரவலாகப் பரவின (காண்க யோசுவா 2:10, 11; 9:9; 1 சாமுவேல் 4:8).

தேவன் பார்வோனை எவ்வாறு கையாண்டார் என்பது பற்றிய விவரங் களைப் பவுல் தரவில்லை, ஏனெனில் அது ஒவ்வொரு யூதப் பள்ளியில் படிக்கும் பையன்கூட அறிந்திருந்த விஷயமாக இருந்தது. பார்வோனின் இருதயம் கடினப்பட்டது என்ற விஷயமே பவுல் தமது வாசகர்கள் கவனம்குவிக்க வேண்டிய திறவுகோல் விஷயமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். 18ம் வசனத்தில் பவுல், தேவன் "எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்" என்று கூறினார். கடின இருதயம் என்பது, அவிசுவாசமுள்ள, முரட்டாட்டமான, இணங்காத இருதயமாக உள்ளது. டக்ளஸ் J. மூ என்பவர், இது "தேவன், அவரது வசனம் மற்றும் அவரது கிரியை ஆகியவற்றைப் பற்றிய உணர்வு இல்லாத நிலையாக உள்ளது" என்று எழுதி னார்.[5]

தேவன் பார்வோனுடைய இருதயத்தை *எவ்வாறு* (எந்தக் கருத்தளவில்) கடினப்படுத்தினார் என்பதைப் பற்றிக் கலந்துரையாடுவதற்கு மக்கள் பல மணி நேரங்களைச் செலவிட்டுள்ளனர். பத்து வாதைகளைப் பற்றி நாம் வாசிக்கும்போது, அவ்விவரமானது பகுதி நேரத்திற்கு, தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் என்று கூறுகிறது (யாத்திராகமம் 9:12; 10:1, 20, 27; 11:10; 14:8), மற்றும் பகுதி நேரத்திற்கு அது பார்வோன் தனது இருதயத்தைக் கடினப்படுத்தினான் என்று கூறுகிறது (யாத்திராகமம் 7:13, 14, 22; 8:15, 19, 32; 9:7, 34, 35). பல எழுத்தாளர்கள், மோசேயின் மூலமாக "என் ஜனங்களைப் போகவிடு" என்று கூறியதன்மூலம் தேவன் பார்வோனின் இருதயத்தை மறைமுகமாகக் கடினப்படுத்திய வேளையில், பார்வோன் தேவனு டைய ஆணையைக் கவனிக்க மறுத்ததின் மூலம் தனது சொந்த இருதயத்தைத் தானே கடினப்படுத்திக்கொண்டான் என்று முடிவு செய்கின்றனர். லியோன் மோரீஸ் என்பவர், "இவ்விடத்திலோ அல்லது வேறு எவ்விடத்திலுமோ, முதலில் தனக்குத்தானே இருதயத்தைக் கடினப்படுத்திக்கொள்ளாத எவரையும் தாம் கடினப்படுத்தப்போவதாகத் தேவன் கூறவில்லை" என்று குறிப்பிட்டார்.[6]

வெண்ணெய் மற்றும் சேறு ஆகியவற்றின்மீது சூரியக்கதிர்களின் செயல் விளைவு என்பது அடிக்கடி பயன்படுத்தப்படுகிற விவரிப்பாக உள்ளது. வெண்ணெயை உருக்கும் அதே கதிர்கள் சேற்றைக் கடினமாக்குகின்றன.

அதுபோலவே, தேவன் பேசுகிறபோது, சிலருடைய இருதயங்கள் மென்மை யாகும் அதே வேளையில் மற்றவர்களின் இருதயங்கள் கடினப்படுகின்றன. தேவனுடைய வார்த்தைகள் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தின, ஏனென்றால் அவனுடைய இருதயம் (நான் இதை இவ்வாறு இடலாம் என்றால்) "சேற்றினால் உண்டாக்கப்பட்டிருந்தது."

தேவன் பார்வோனின் இருதயத்தை எவ்வாறு கடினப்படுத்தினார் என்பது குறித்து இன்றைய நாட்களில் மக்கள் போராடிக் கொண்டுள்ளனர், ஆனால் பவுல் தமது யூத வாசகர்களுக்கு முரண்பாடாக இருந்த ஒரு விஷயத்தை *எழுப்ப வில்லை* என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தேவன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் என்று வாசித்து, அதன்பின்னர் அதற்காக வருத்தப்பட்ட ஒருசில மக்களை நான் சந்தித்திருக்கிறேன், ஆனால் யூதர்களின் இருதயங்களில் பார்வோனுக்காக பரிதவிப்பு எதுவும் இருந்ததில்லை. அவர்களைப் பொறுத்த மட்டில், அந்த அடக்குமுறை ஆட்சியாளனுக்குத் தேவன் தாம் விரும்புகிறபடி யெல்லாம் செய்யத் தேவன் உரிமை கொண்டிருந்தார் என்பதே.

பின்பு பவுல் ஒரு தொகுப்புரைக் கூற்றை ஏற்படுத்தினார்: "ஆதலால் [தேவன்] எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்" (ரோமர் 9:18). ஒரு யூதரிடம் நீங்கள், "தேவன் உங்கள் முன்னோர்கள் மீது இரக்கம் காண்பித்தபோது அவர் நியாயமா யிருந்தாரா?" என்று கேட்டால், அவர் "ஆம்" என்று கூறுவார். அவரிடத்தில் நீங்கள், "பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தியபோது தேவன் நியாயமாயிருந்தாரா?" என்று கேட்டால், அவர் "நிச்சயமாக!" என்று பதில் அளிப்பார். இவ்வாறு பவுல், தேவன் சிலரை ஏற்றுக்கொண்டு மற்றவர்களைப் புறக்கணிக்கிறார், ஏனெனில் இது ஆண்டுகளினூடே அவரது செயல்முறையுடன் சீர்பொருத்தமானதாக உள்ளது என்று நிலைநாட்டினார். அவர் *எப்போதுமே* சிலரை ஏற்றுக்கொண்டு மற்றவர்களைப் புறக்கணித்திருக்கிறார்.

## அவரது நபர்த்துவத்துடன் சீர்பொருத்தமாயிருத்தல் (9:19-21)

தேவன் தேர்ந்துகொள்ளுதலை ஏற்படுத்துவதில் நியாயமானவராக இருக்கிறார் ஏனெனில் இது அவரது நபர்த்துவத்துடன் சீர்பொருத்தமாயுள்ளது என்பது பவுலின் இரண்டாவது கருத்தாக இருந்தது. அதாவது, அவரது தேர்ந்து கொள்ளுதல்கள், அவர் யாராக இருக்கிறார் என்ற அவரது இயல்புக்குச் சீர்பொருத்த மானவைகளாக உள்ளன.

### ஊக்கமளிக்கும் கேள்விகள் (வசனம் 19)

பவுல் தமது சிந்தனையை முன்னெதிர்நோக்கும் ஒரு மறுப்புரையுடன் அறிமுகப்படுத்தினார்: "இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம்பிடிக்கிறார்? அவர் சித்தத்திற்கு எதிர்த்துநிற்பவன் யார்?" என்று என்னுடனே சொல்லுவாய் (வசனம் 19). இவ்வசனத்தில் கற்பனை செய்யப்படும் மறுப்புரையாளர் அனேக மாக ஒரு யூதராக இருக்க மாட்டார். (7ம் வசனத்தின் மத்தியில் தொடங்கி) இது வரையிலும், பவுலின் விவாதமானது யூதர்கள் கருத்துவேறுபடும்

எந்த விஷயத்தையும் முன்வைத்திருந்ததில்லை. ஆகவே, நாம் 19ம் வசனத்திற்கு வருகையில், பவுல் புறம்பேயுள்ள ஒரு கற்பனையான நபரை எதிர்கொண்டு அவரை எதிர்த்து நிற்கத் தமது சகயூதர்களுடன் அருகாக நிற்பதாகச் சித்தரித்துக்கொள்ள வேண்டும். அவரைப் பவுல் 20ம் வசனத்தில் "மனுஷனே" என்று குறிப்பிட்டார். *இந்தத்* தனிநபரின் முறையீடு தரப்பட்டுள்ளது: "ஆதலால் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவனைக் கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார் [காண்க வசனம் 18], இப்படியானால், அவர் இன்னும் ஏன் குற்றம் பிடிக்கிறார்? அவர் சித்தத்திற்கு எதிர்த்துநிற்பவன் யார்?"

இவைபோன்ற கேள்விகள் தெய்வீக முன்னறிவின் கலந்துரையாடல்களுக்கு இருதயம்போன்ற மையப்பகுதியாக உள்ளன. தேவன் முன்னறிந்திருந்தார் மற்றும் சில விஷயங்களில், ஒரு குறிப்பிட்ட நபர் ஒரு குறிப்பிட்ட விஷயத்தைச் செய்வார் என்று முன்னுரைத்தும் இருந்தார் என்றால், அந்தத் தனிநபர் செய்த விஷயத்திற்கு அவரைத் தேவன் பொறுப்பாளியாக்குவது ஏன்? தேவனுடைய சித்தத்தை எதிர்த்து நிற்க யாரால் முடியும்? 19ம் வசனத்தின் கேள்வியை நாம் வாசிக்கையில், பவுல் எவ்வாறு பதில் அளித்தார் என்று கேள்விப்பட நாம் பெரும் அக்கறை கொண்டிருக்கிறோம்.

**திகைக்க வைக்கும் பதில் (வசனங்கள் 20, 21)**

நாம் எதிர்பார்க்கிற வகையில் பவுல் பதில் அளிக்கவில்லை. அவர் தேவனுடைய இராஜரீகம் மற்றும் மனிதனுடைய சுயாதீன சித்தம் ஆகியவற்றிற்கு இடையிலான உறவின்மீது நீண்ட கலந்துரையாடலைத் தொடங்கவில்லை. மாறாக, தேவன் மனிதனுக்குப் பதில்தர வேண்டியவரல்ல என்பதே அவரது அடிப்படைப் பதிலாக இருந்தது. அவர் தேவனல்லவா!

பவுல், "அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்?" (வசனம் 20அ) என்று கேட்டார். இந்தக் கேள்வியில் இரு வார்த்தைகள் நேரெதிர்ப்படுத்தப்பட்டுள்ளன: "மனிதன்" (*anthropos*[7]) மற்றும் "தேவன்" (*theos*). ஒருபுறத்தில், முடிவுக்குட்பட்ட, எல்லைக்குட்பட்ட, அற்பமான, அறியாமையுள்ள மனிதன் இருக்கிறான்; மற்றும் இன்னொருபுறத்தில், முடிவற்ற, எல்லையற்ற, சர்வ வல்லமையுள்ள, சகலமும் அறிந்த தேவன் இருக்கிறார். இந்த நேர்மாறு CJB வேதாகமத்தில் முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது, இந்த வேதாகமம் 20ம் வசனத்தின் முதல் பகுதியைப் பின்வருமாறு மொழிபெயர்த்துள்ளது: ["Who are you, a mere human being, to talk back to God?"] "தேவனிடத்தில் திருப்பிப் பேசுவதற்கு, வெறும்மனிதனாயிருக்கிற நீ யார்?"

தேவனிடத்தில் மனிதன் திருப்பிப் பேசுவதிலுள்ள மதியீனத்தைக் காண்பிக்கப் பவுல், யூதர்களுக்குப் பழக்கமான ஒரு ஒப்புவமையைப் பயன்படுத்தினார்: குயவன் மற்றும் அவனது களிமண் (காண்க ஏசாயா 29:16; 45:9; 64:8; எரேமியா 18:6). "உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?" (ரோமர் 9:20ஆ, 21).

குயவன் தனது சக்கரத்துடன் இருத்தல் என்பது வேதாகமம் எழுதப்

பட்ட காலத்தில் ஒரு பொதுக்காட்சியாக இருந்தது. குயவன் களி மண் மொத்தை ஒன்றைத் தனது சக்கரத்தின் நடுவில் வைத்து, அந்த சக்கரத்தைச் சுழற்றி, பின்பு அந்தக் களிமண்ணை ஒரு பாத்திர மாகத் திறமையுடன் வடிவமைக்கத் தொடங்குவான். அது "அழகான ஒரு ஜாடி" (Phillips) என்பது போன்ற "கனத்துக்குரிய காரியத்திற்கான" பாத்திரமாயிருக்கலாம் அல்லது அது "குப்பைகளை எறிவதற்காக வைக்கும்" (NLT) பாத்திரம் போன்ற ''சாதாரணப் பயன்பாட்டிற்கான'' பாத்திரமாயிருக்கலாம். "கனத்திற்குரிய பயன்பாடு" மற்றும் "சாதாரணப்பயன்பாடு" என்ற வார்த்தைகளுக்குப் பதிலாகக் கிரேக்க வசனத்தில் "கனம்" மற்றும் "கனவீனம்" என்ற வார்த்தைகள் உள்ளன. தேவன் தமது விசேஷித்த மக்களாகக் கனப்படுத்திய இஸ்ரவேல் மக்கள் (வசனங்கள் 4, 5) ''கனத்திற் குரிய'' பாத்திரம் என்பதற்கு விவரிப்பாக உள்ளனர். பார்வோன் என்பவன் ''கனவீனத்திற் குரிய" பாத்திரத்திற்கான உதாரணமாக இருக்கக்கூடும். குயவன் களிமண்மீது கட்டுப்பாடு/அதிகாரம் கொண்டுள்ளான், குப்பை வீசப்படும் பாத்திரம், "ஆனால் நீ என்னை ஏன் ஒரு அழகிய பாத்திரமாக உருவாக்கவில்லை?" என்று ஒருபோதும் முறையிடுவதில்லை என்று கூறினார்.[8]



எல்லா ஒப்பீடுகளைப் போலவே, இதுவும் மிக அதிகமாக வலியுறுத்தப்படக் கூடாது. முதலாவது, மக்கள் களிமண்ணாலான உயிரற்ற மொத்தைகளாக இருப்பதில்லை. அவர்கள் தேவனை எதிர்த்து நிற்கக்கூடும்; அவர்கள் தங்களைத் தேவன் எவ்வாறு படைத்துள்ளார் என்பது பற்றி, அடிக்கடி முறையிடுகின்றனர் (''நான் ஏன் இவ்வளவு குட்டையாக ... வளர்த்தியாக ... சிறியவனாக ... பெரியவனாக இருக்கிறேன்?") இரண்டாவது, "களிமண்ணின்" தன்மையானது அதிலிருந்து செய்யப்படும் பாத்திரம் எவ்வகைப்பட்டதாக இருக்கமுடியும் மற்றும் அது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பவற்றிற்குக் காரணியாக உள்ளது (காண்க எரேமியா 18:1-10; 2 தீமோத்தேயு 2:20, 21). அது நிச்சய மாகவே பார்வோனின் விஷயத்திலும் உண்மையாயிருந்தது. இருந்த போதிலும், பவுலின் சிந்தனையானது மதிப்புடையதாகவே நிலைத்துள்ளது: தேவன் தேவனாக இருக்கிறார், மற்றும் அவர் தமது சித்தத்தின்படி எதையும் செய்ய உரிமைகொண்டுள்ளார்.

நம்மில் சிலர், பவுல் 19ம் வசனத்தின் கேள்விக்குப் பதில் அளிக்கக் கொஞ்சமே முயற்சி மேற்கொண்டார் என்பது பற்றி ஏமாற்றம் அடையலாம், ஆனால் அவர் யூதர்களுக்குத் தக்கவாறு இருக்கும்படியான ஒரு அணுகுமுறையைப் பயன்படுத்தினார் என்பதை மனதில் கொள்ளுங்கள். தேவன் இஸ்மவேலை விட்டுவிட்டு ஈசாக்கை அல்லது ஏசாவை விட்டுவிட்டு யாக்கோபைத் தேர்ந் தெடுத்தது அல்லது கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்திய பின்பு, கலகம் செய்யும் இஸ்ரவேலரை விட்டுவைத்திருந்தது அவருக்கு நியாயமற்றதாக இருந்தது என்று யூதரல்லாதவர் ஒருவர் கருத்துத் தெரிவித்தால், அதைப்பற்றிய விஷயம் என்ன? இதற்கு ஒரு யூதர், "உங்களைப்பற்றி நீங்கள் யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? தேவனிடத்தில் கேள்விகேட்க உங்களுக்கு என்ன உரிமையுள்ளது?" என்று பதில் அளிப்பதைக் கற்பனை செய்வது கடினமான

*தல்ல. யூதரல்லாத ஒருவர் தேவனுடைய தேர்ந்துகொள்ளுதல்களைக் குறித்து அவரிடத்தில் கேள்விகேட்க உரிமைகொண்டிருந்ததில்லை என்றால், கர்த்தர் விசுவாசிகளைத் தேர்ந்துகொண்டு அவிசுவாசிகளைப் புறக்கணிக்கும்போது, அதைப்பற்றிக் கேள்விகேட்க ஒரு யூதருக்கும் உரிமை இல்லை என்ற முடிவைப் பவுல் முன்னெதிர்நோக்கினார்.*

*"தேவன் நடுநிலை தவறாதவராக இருக்கிறாரா?" என்ற கேள்விபற்றி, நாம் பவுலின் இரண்டாவது கருத்தைப் பின்வருவது போன்று விளக்கலாம்: "தேவன் நடுநிலை தவறாதவராக இருக்கிறார் - ஏனெனில் அவர் தேவனாக இருக்கிறார் - மற்றும் அவர் எதைச்செய்தாலும் அது, அவர் யாராக இருக்கிறார் என்ற அவரது இயல்புக்குச் சீர்பொருத்தமானதாக உள்ளது." சிலவேளைகளில் நீங்களும் நானும், தேவன் ஒரு செயலை* ஏன் *செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளா திருக்கலாம் (நாம் வெறும் மனிதப்பிறவிகள்தானே), ஆனால் நாம் அவர் சரியானதைச் செய்வார் என்று நம்பிக்கையாயிருக்க முடியும். ஆபிரகாம் கூறியதுபோன்று, "சர்வலோக நியாயாதிபதி நீதிசெய்யாதிருப்பாரோ" (ஆதியா கமம் 18:25).*

## அவரது நோக்கத்திற்குச் சீர்பொருத்தமாயிருத்தல் *(9:22-29)*

*தேவன் சிலரைத் தேர்ந்தெடுக்கவும் மற்றவர்களைப் புறக்கணிக்கவும் உரிமை கொண்டுள்ளார் என்பதை நிலைநாட்டிய பின்பு பவுல், தேவன் (யூதர்களோ அல்லது புறஜாதிகளோ, யாராயிருப்பினும்) அவிசுவாசிகளை விட்டுவிட்டு விசுவாசிகளைத் தேர்ந்தெடுத்தல் பற்றிய குறிப்பிட்ட கேள்விக்குத் திரும்பினார். 22ம் வசனம் தொடங்கி 29ம் வசனம் வரையிலும், பவுல் தேவனுடைய நடுநிலையான தன்மைக்கு நிரூபணம் கொடுத்தார். குறிப்பாக, அவர் தேவனு டைய தேர்ந்துகொள்ளுதல்கள் அவரது நோக்கத்திற்கு - பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்கள் மூலமாக முன்பே அறிவிக்கப்பட்ட நோக்கத்திற்கு - சீர்பொருத்த மானவையாக இருந்ததால் அவைகள் நடுநிலையானவையாயிருந்தன என்று வலியுறுத்தினார்.*

### தேவனுடைய நோக்கம் நிறைவேற்றப்பட்டது *(வசனம் 22-24)*

*22 முதல் 24 வரையுள்ள வசனங்கள் கிரேக்க வசனத்தில் ஒரே வாக்கிய மாக உள்ளன (காண்க (KJV). கிரேக்க மொழியில் வார்த்தைகளின் அமைப்பு சிக்கலானதாகவும், குழப்பமானதாகவும்கூடக் காணப்படுகிறது, ஆனால் பவுலின் அடிப்படைச் செய்தி தெளிவாக உள்ளது. இந்த வாக்கியம் அப்போஸ்தலரின் "தேவன் தமது கோபத்தைக் காண்பிக்கவும், தமது வல்லமையைத் தெரிவிக்கவும், ... அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருந்தாரானால் உனக்கென்ன[9]?" என்ற கேள்வியுடன் தொடங்குகிறது (வசனம் 22, 23ஆ).*

*இவ்வசனத்தைப் புரிந்துகொள்வதற்கு, இதைத் தனியே எடுத்து பகுதி பகுதியாகக் கண்ணோக்குதல் உதவலாம். தேவன், "தமது கோபத்தைச் செயல் விளக்கப்படுத்துவதற்கும் தமது வல்லமையை அறியப்பண்ணுவதற்கும் சித்தமுள்ளவராக" இருந்தார். சந்தர்ப்பப்பொருளில் இவ்வார்த்தைகள், தேவன்*

*பார்வோனிடத்தில் கூறியதைக் குறிப்பிடலாம் (வசனம் 17), ஆனால் இவைகள் ஒரு பொதுவான சத்தியத்தையும் உரைக்கின்றன. முடிவில் தேவனுடைய கோபம் தேவபக்தியற்றவர்கள்மீது விழுகையில் அவரது வல்லமை செயல் விளக்கப் படுத்தப்படும் (காண்க 1:18).*

*நியாயத்தீர்ப்பு வருவதாக இருந்தாலும், தேவன் "அழிவுக்கு எத்தன மாக்கிய பாத்திரங்களை அதிக பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தார்." பவுல் தொடர்ந்து குயவன் மற்றும் களிமண் என்ற ஒப்புவமையை விளக்கினார், ஆனால் மாறுபட்ட நடைமுறைப் பயன்பாட்டுடன் அதை விளக்கினார். பார்வோன் "அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட" பாத்திரத்திற்கு நல்லதொரு விவரிப்பாக இருக்கிறான், அவனை தேவன் "அதிக பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்." பார்வோன் தனது மனதை மாற்றிக்கொள்ளவும் இஸ்ரவேல் மக்களைப் போக அனுமதிக்கவும், அவனுக்குக் கர்த்தர் வாய்ப்புக்குப் பின் வாய்ப்பாகப் பல சந்தர்ப்பங்களைக் கொடுத்தார். வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் என்பது இன்னொரு விவரிப்பாக உள்ளது. தேவன் "[அவர்களை] அதிக பொறுமையுடன் சகித்திருக்காதிருந்தால்," அவர்கள் ஒரு மக்களினமா யிராதபடிக்கு அழிக்கப்பட்டிருப்பார்கள். இந்தக் கொள்கையானது பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த புறஜாதியாருக்கும் நடைமுறைப்படுத்தப்படக்கூடும் - மற்றும், ஆம், அது நமக்கும் நடைமுறைப்படுத்தப்படக்கூடும். தேவன்* <u>தொடர்ந்து</u> *"அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினைப் பாத்திரங்கள்மேல் மிகவும் நீடிய சாந்தத்தோடே பொறுமையாயிருக்கிறார்." ஏன்? ஏனென்றால் அவர் நமக்கு மனந்திரும்ப வாய்ப்புக்கள் தந்துகொண்டிருக்கிறார் (காண்க 2:4). பேதுரு, "... கர்த்தர் ... ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" என்று எழுதினார் (2 பேதுரு 3:9). தேவன் தமது கோபத்தை ஊற்றுவதற்கு மாறாகத் தமது கிருபையைப் பொழிவார்.*

*இவை எல்லாவற்றையும் மனதில் கொண்டவர்களாக நாம் 22ம் வசனத்தி லுள்ள கேள்வியை நாம் தொடங்கிய கேள்வியுடன் பிணைப்போமாக. 14ம் வசனத்தில் "தேவன் நடுநிலை தவறாதவராக இருக்கிறாரா?" (அல்லது "தேவன் நடுநிலை தவறியவராக இருக்கிறாரா?") என்பதே கேள்வியாக இருந்தது. 22ம் வசனத்தில் பவுல் செயல்விளைவில், "இழந்துபோகப்பட்டவர்களுக்கு மனந்திரும்ப வாய்ப்புக்கொடுத்து அவர்களிடத்தில் தேவன் பொறுமையாக இருப்பது பற்றிய விஷயம் என்ன?" என்று கேட்டார். "இது தேவன் எவ்வளவு நடுநிலையாளராக இருக்கிறார் என்று செயல்விளக்கப்படுத்துவதில்லையா"; "நிச்சயமாகவே!" என்பவை 22ம் வசனத்தில் மறைமுகமாக உணர்த்தப்படும் கேள்வி மற்றும் பதிலாக உள்ளன.*

*கடந்துசெல்லுகையில், 23ம் வசனத்தின் முதற்பகுதி, "[இழந்துபோனவர்களை மனந்திரும்புதலுக்கு கொண்டுவர அவர் பொறுமையாயிருந்ததுபோல] தாம் மகிமைக்காக எத்தனமாக்கின கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்தவும் சித்தமாய்" என்று கூறுகிறது. தேவன் "கிருபாபாத்திரங்கள்மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரியப்படுத்த" என்பது நமக்கு வனாந்தர யாத்திரையின் வரலாற்றையும் அவர் சீனாய் மலையில் இஸ்ரவேல் மக்களைக் கிருபையாக அழிவிலிருந்து விலக்கிய வரலாற்றையும் நமக்கு நினைவூட்டக்கூடும் (வசனங்கள் 15, 18அ). அந்த*

*சந்தர்ப்பத்தில் தேவன் செய்த யாவும், அவரது இரக்கம் எவ்வளவு ஏராளமாக ("ஐசுவரியமானதாக") இருக்க முடியும் என்பதைக் காண்பித்தன.*

*இருப்பினும், பவுல் பார்வோன் மற்றும் இஸ்ரவேல் மக்கள் ஆகியோரைப் பற்றிய விவரிப்பிலிருந்து கடந்துசென்று கலந்துரையாடலின்கீழுள்ள விஷயத்தின் நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தத் தயாரானார். "கிருபா பாத்திரங்களை" குறிப்பிட்டபின்பு அவற்றை, அப்போஸ்தலர் "[தேவன்] தமது மகிமைக்காக எத்தனமாக்கிய"தாகவும் "நம்மை அழைத்திருந்ததாகவும்" குறிப்பிட்டார் (வசனங்கள் 23ஆ, 24ஆ). "எத்தனமாக்கிய" மற்றும் "அழைத்த" என்பவை, தேவன் முன்னறிந்திருந்தவர்கள் அல்லது முன்குறித்திருந்தவர்கள் பற்றி பேசும் மற்ற வழிகளாக உள்ளன (8:29, 30)[10] - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அவர்கள் தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர்.*

*பவுல், "நம்மை அழைத்திருக்கிறாரே" (9:24ஆ) என்று குறிப்பிடுவதற்கு முன்பு, "அவர் யூதரிலிருந்து மாத்திரமல்ல, புறஜாதிகளிலுமிருந்து" (வசனம் 24அ) என்பதைக் கூட்டியதன்மூலம் முரண்பாட்டின் இருதயம் போன்ற மையப் பகுதியை அடைந்தார். யூதர்களுக்கு, தேவன் பல யூதர்களைப் புறக்கணித்திருந்தார் என்பது போதிய அளவுக்குத் தொந்தரவை ஏற்படுத்திக்கொண்டிருந்தது. அதே வேளையில் கர்த்தர், புறஜாதியார் பலரை ஏற்றுகொண்டிருந்தார் என்பது இன்னும் அதிகம் அமைதலற்ற சூழ்நிலையை ஏற்படுத்திற்று. உண்மையில், அவர் யூதர்களைக் காட்டிலும் அதிகமான அளவில் புறஜாதியாரை ஏற்றுக்கொண்டிருந்தார்.[11] பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தேவன் யூத மக்களினத்துடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையைச் சிந்தையில் காத்த நிலையில் பார்க்கும்போது, இது நியாயமானதாக இருந்ததா?*

### தேவனுடைய நோக்கம் முன்னுரைக்கப்பட்டது (வசனங்கள் 25-29)

*விஷயங்களின் இந்நிலை தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்பட்டிருந்தது என்பதே பவுலின் பதிலாக இருந்தது. புறஜாதியாரை உள்ளடக்குதல் என்பது தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றிற்குச் சீர்பொருத்தமானதாக இருந்தது என்பதை நிரூபிக்க, முதலில் பவுல், ஓசியாவின் தீர்க்கதரிசனத்திலிருந்து இரு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பித்தார்:*

> *அந்தப்படி: "எனக்கு ஜனங்களல்லாதவர்களை 'என்னுடைய ஜனங்கள்' என்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் 'சிநேகிக்கப்பட்டவள்' என்றும் சொல்லி அழைப்பேன் [ஓசியா 2:23]."*
>
> *"நீங்கள் என்னுடைய ஜனங்களல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் ஜீவனுள்ள தேவனுடைய பிள்ளைகள் என்னப்படுவார்கள் என்று ஓசியாவின் தீர்க்கதரிசனத்தில் சொல்லியிருக்கிறது[12] [ஓசியா 1:10]" (ரோமர் 9:25, 26).*

*ஓசியா தீர்க்கதரிசனப் புத்தகத்திலிருந்து இவ்வசனங்களைச் சந்தர்ப்பப் பொருளில் வாசித்துப் பாருங்கள், அப்போது நீங்கள், ஓசியா புறஜாதியாரைப் பற்றியல்ல, ஆனால் பின்வாங்கிப்போகும் யூதர்களைப் பற்றிப் பேசினார்*

என்பதைக் கண்டறிவீர்கள். இவ்வசனப்பகுதியைப் பவுல் ஏவுதலினால், ஒரு *கொள்கையை* நிலைநாட்டுவதற்காகப் பயன்படுத்தினார்: தேவனுடைய மக்களாக *இராதவர்கள்,* தேவனுடைய மக்கள் *ஆவதென்பது* அவர்களுக்குச் சாத்தியமானதாகவே இருந்தது. ஆகையால், தேவனுடைய மக்களாக *இராத* புறஜாதியார் (காண்க எபேசியர் 2:11, 12), தேவனுடைய மக்கள் (கிறிஸ்தவர்கள்) *ஆகவேண்டும்* என்பது தேவனுடைய நோக்கத்திற்குச் சீர்பொருத்தமானதாகவே இருந்தது.

இஸ்ரவேல் மக்களில் (இயேசுவின்மீது விசுவாசம் கொண்ட) கொஞ்சப் பேர்களையே தேவன் ஏற்றுக்கொண்டிருந்தார், அதேவேளையில் அவர் இஸ்ரவேல் மக்களினத்தில் பெரும்பான்மையானவர்களைப் புறக்கணித் திருந்தார் என்ற உண்மை பற்றிய விஷயம் என்ன (காண்க ரோமர் 9:6ஆ)? இதுவே விஷயமாக இருக்கும் என்று தீர்க்கதரிசிகளும் முன்னுரைத்திருந்தனர் என்று பவுல் கூறினார். இப்போது அவர், ஏசாயா புத்தகத்திலிருந்து மேற்கோள் காண்பித்தார்:

> *அல்லாமலும் இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கம் சமுத்தி ரத்தின் மணலத்தனையாயிருந்தாலும் [காண்க ஆதியாகமம் 22:17], மீதி யாயிருப்பவர்கள் மாத்திரம் இரட்சிக்கப்படுவார்கள் என்றும்; அவர் நீதி யோடே சீக்கிரமாய்த் தம்முடைய காரியத்தை நிறைவேற்றுவார்; கர்த்தர் பூமியிலே சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் என்றும் ஏசாயா இஸ்ரவேலரைக்குறித்துச் சொல்லுகிறான்[13] (ரோமர் 9:27, 28; காண்க ஏசாயா 10:22, 23).*

இவ்வசனப்பகுதியில் "மீதியாயிருப்பவர்கள்" *(hupoleimma)* என்ற வார்த்தையே திறவுகோல் சொற்றொடராக உள்ளது, இது "சிறிய எண்ணிக்கை" ஒன்றைச் சுட்டிக்காண்பிக்கிறது.[14] ஏசாயா 10:22, 23ன் சந்தர்ப்பப்பொருளை நீங்கள் வாசித்தால், அடிமைத்தளையிலிருந்து கானான் நாட்டிற்குத் திரும்பி வந்த இஸ்ரவேலின் மீதியாயிருந்தவர்களைப் பற்றித் தீர்க்கதரிசி பேசினார் என்பதை நீங்கள் கவனிப்பீர்கள். மீண்டும் பவுல் ஏவுதல் பெற்ற நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்தினார். பழைய ஏற்பாட்டில், யூதாவில் மீதியாயிருந் தவர்கள் அடிமைத்தளையிலிருந்து மீட்கப்பட்டனர். ஆகவே, புதிய ஏற்பாட்டு யுகத்தில் இஸ்ரவேலில் மீதியாயிருந்தவர்கள் இரட்சிக்கப்படுகின்றனர் என்பது திகைப்புக்குரியதாக இருக்கக்கூடாது.

"மீதியாயிருப்பவர்கள்" என்ற செய்தியானது இருமடங்கானதாக உள்ளது. முதலாவது, மீதியாயிருப்பவர்கள் *மாத்திரம்* இரட்சிக்கப்படுவார்கள் என்பது *கவலைக்குரிய* செய்தியாக இருந்தது. இரண்டாவது, மீதியாயிருப்பவர்கள் *இரட்சிக்கப்படுவார்கள்* என்பது *சந்தோஷத்திற்குரிய* செய்தியாக இருந்தது (காண்க ரோமர் 11:5). இஸ்ரவேலில் *எல்லாரும்* புறக்கணிக்கப்படவில்லை. செய்தியின் பிற்பகுதியைப் பவுல் ஏசாயா தீர்க்கதரிசனத்திலிருந்து மீண்டும் மேற்கோள் காண்பித்ததன்மூலம் தகவல் அளித்தார்: "அல்லாமலும் ஏசாயா முன்னே சொன்னபடி: சேனைகளின் [Sabaoth] [hosts[15]] கர்த்தர் நமக்குள்ளே ஒரு சந்ததியை [நேரடியான அர்த்தத்தில், ஒரு விதை] மீதியாக வைக்காதிருந்தாரா னால் நாம் சோதோமைப் போலாகி கொமோராவுக்கு ஒத்திருப்போம்" (9:29;

காண்க ஏசாயா 1:9).

ஏசாயா புத்தகத்திலுள்ள வசனப்பகுதியானது, நாட்டில் அசீரியர்கள் ஊடுருவும் போது, யூதா மற்றும் எருசலேம் ஆகியவற்றின் அழிவின் காலத்தைக் குறிக்கிறது. முன்னதாகத் தேவன் சோதோம் மற்றும் கொமோரோ ஆகியவற்றைப் பூமியின் முகப்பிலிருந்து துடைத்துப் போட்டிருந்தார் (காண்க ஆதியாகமம் 19:24, 25) - அந்த நகரங்கள் எங்கிருந்தன என்று நாம் உறுதியாய்க் கூற இயலாதபடிக்கு அவற்றை அவர் அழித்திருந்தார். அப்படிப்பட்ட விஷயமானது அசீரியர்களின் தாக்குதலின்போது நடைபெறாதிருந்தது. மாறாக, மீதியாயிருந்தவர்கள் சிலர் விட்டுவிடப்பட்டிருந்தனர், அதன்மூலம் ஒரு சந்ததி வளர முடிந்தது. அது போலவே, பவுலின் நாட்களிலும் தேவன் இஸ்ரவேலில் - பவுலைப் போன்று இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொண்டு இருந்தவர்களான - இன்னமும் மீதியா யிருப்பவர்களைக் கொண்டிருந்தார் (காண்க 11:1). தேவன் இந்த மக்களின் மூலமாகத் தமது நோக்கத்தை நிறைவேற்ற முடிந்தது மற்றும் அதையே அவர் செய்வார்.

## முடிவுரை

தேவன் பல நூற்றாண்டுகளாக இஸ்ரவேல் மக்களிடம் கிரியை செய்திருந் தார். பின்பு ஏன் இஸ்ரவேலில் மீதியாயிருப்பவர்கள் மாத்திரம் தேவனுடைய திட்டத்தில் நிறைவாக நிலைத்திருக்கும்படியாயிற்று? இந்தக் கேள்விக்குப் பவுல் தமது நிருபத்தின் அடுத்த பகுதியில் விடையளித்தார்.

இந்தப் பாடத்தில், நாம் சிலரைத் தேர்ந்துகொள்ளுதல் மற்றும் பிறரைப் புறக்கணித்தல் ஆகியவற்றில் தேவனுடைய நடுநிலையான தன்மையைப் பற்றிக் கலந்துரையாடினோம். பவுலினால் கலந்துரையாடப்பட்ட குறிப்பிட்ட பிரச்சனையானது இன்றைய நாட்களில் நம்மைப் பற்றியதாக இராதிருப்பினும், பின்வரும் சத்தியமானது உங்கள் சிந்தையை ஈர்த் திருக்கும் என்று நான் நம்புகிறேன்: தேவன் நடுநிலையானவராக *இருக்கிறார்;* அவர் நியாயமுள்ளவராக இருக்கிறார், அவர் நீதியுள்ளவராக இருக்கிறார். தேவன் நடுநிலையானராக இருப்பதில்லை என்று எவரேனும் கருத்துத் தெரிவிக்கும் போது, அந்த நபர் தேவனைப் பற்றிக்கூறுவதைக் காட்டிலும் தன்னைப்பற்றி அதிகமாய்க் கூறுபவராக இருக்கிறார். அவர் தமது சொந்த அறியாமையையும் அவிசுவாசத்தையும் வெளிக்காண்பிக்கிறார்.

இருப்பினும், நமது வேதபாட வசனப்பகுதியானது, தேவன் நடுநிலையான வராக இருக்கிறார் என்று அறிவிப்பது மாத்திரமல்ல; அது அவர் *இரக்கம்* நிறைந்தவராக இருக்கிறார் என்றும் அறிவிக்கிறது. C. E. B. கிரேன்ஃபீல்டு என்பவர், 9 முதல் 11 வரையிலான அதிகாரங்களில், “இரக்கம்” என்பதே “திறவுகோல் வார்த்தையாக” உள்ளது என்று கருத்துத் தெரிவித்தார்.[16] இவ்வார்த் தையின் வினைச்சொல் மற்றும் பெயர்ச்சொல் வடிவங்கள் இந்த அதிகாரங்களில் ஒன்பது முறைகள் காணப்படுகின்றன மற்றும் இந்த நிருபத்தின் எஞ்சிய பகுதியில் இது ஒவ்வொன்றும் ஒரேஒருமுறை மாத்திரம் காணப்படுகிறது.[17] தேவன் நடுநிலையானவராக இருக்கிறார் என்பதற்காக நான் அவருக்கு நன்றி நிறைந்தவனாக இருக்கிறேன், ஆனால் அவர் இரக்கம் நிறைந்தவராகவும் இருக் கிறார் என்பதற்காக நான் என் முழு இருதயத்தோடும் அகமகிழ்கிறேன். விஷயம் அதுவாக இருப்பதால், நான் நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருக்கும்

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

இந்தப் பாடம் பயன்படுத்தப்படும்போது, தேவனுடைய இரக்கம் பற்றிய முடிவுக்குறிப்புரைகள், நாம் கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தின் மூல மாகத் தேவனுடைய இரக்கத்தை எவ்வாறு ஏற்புடையதாக்கி கொள்ளலாம் என்ற கலந்துரையாடலுக்கு வழிநடத்தக்கூடும்.

நமது வேதபாட வசனப்பகுதியில் பல்வேறு இடங்களில் நீங்கள் நின்றுநிதானித்து, உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குச் சொந்தமான தனிப்பட்ட நடைமுறைப் பயன்பாட்டை ஏற்படுத்த விரும்பலாம். நீங்கள் இவ்வேதபாட வசனப்பகுதியின் பிரிவுகளை, வேதவசன அல்லது தலைப்புப் பாடங்களுக்குத் தொடக்க இடமாகப் பயன்படுத்தவும் விரும்பலாம். எடுத்துக் காட்டாக, நீங்கள் 15, 16 மற்றும் 18 வசனங்களிலிருந்து இரக்கத்தின் ஆய்வுக் கருத்தை முக்கியத்துவப்படுத்த முடியும்.

மக்கள் தேவனோடு எதிர்த்துத் தர்க்கித்தல் என்பது நடைமுறைப் பயன்பாடு மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்குத் தன்னை ஒப்படைக்கும் பிரிவுகளில் ஒன்றாக உள்ளது (வசனம் 20). இன்றைய நாட்களில் சிலர், "நீர் ஏன் என்னை இவ்வாறு படைத்தீர்?" என்று கேட்கின்றனர். நாம் உடல்ரீதியாக, மனரீதியாக மற்றும் உணர்வுரீதியாகப் படைக்கப்பட்ட விதமானது நம்மீது வரையறைகளை அடிக்கடி வலிந்து திணிக்கிறது. 20ம் வசனமானது, நமக்கு நடக்கிறவைகளை அல்லது சம்பவிக்கிறவைகளைப் பற்றிக் கேள்விகேட்டல் எப்போது சரியானது மற்றும் எப்போது தவறானது என்பது பற்றிய கலந்துரையாடலை அறிமுகப்படுத்தக்கூடும். வால்ட்டர் W. வெஸ்ஸெல் என்பவர், "மனிதரால் தேவனிடத்தில் கேட்கப்படும் எல்லாக் கேள்விகளையும் பவுல் வாயடைக்கவில்லை, ஆனால் அவர் மனிதன் தான் செய்கிறவைகளுக்குத் தேவனைப் பொறுப்பாளியாக்குகிற மற்றும் தங்களின் கேள்விகளினால் தேவனுடைய பண்பைக்குறைக்க முயற்சி செய்கிற மக்களின் மனந்திரும்பாத, தேவனைத் தூற்றுகிற எண்ணப்போக்கைப் பற்றிப் பேசினார் என்று எழுதி னார்."[18] ரிச்சர்டு பேட்டி என்பவர், "தேவனைப் புரிந்துகொள்ளுதலுக்கான மனிதனின் திறனுக்கு அப்பால் தேவன்மீது நம்பிக்கை வைக்கும்படி மனிதன் அழைக்கப்பட்டிருக்கிறான். தேவனுடைய செயல்களைப் பகுத்தறிய முயற்சித்தல் அப்போஸ்தல மதத்துவமற்ற தன்மைக்குரியதாகும், ஏனெனில் அப்படிப்பட்ட பகுத்தறிதல்கள், தேவனுடைய செயல்களை மனிதனின் தர்க்கத்திற்கு ஏற்புடையவைகளாக்குதல் என்ற மனிதனின் விருப்பத்திலிருந்து உதிப்பவையாயிருக்கும்" என்று குறிப்பிட்டார்.[19]

---

குறிப்புகள்

[1]இவ்வசனப்பகுதியில் "இரக்கமாயிருக்க" (*eleeo*) மற்றும் "உருக்கமாயிருக்க" (*oikteiro* என்பதிலிருந்து வருகிறது) ஆகியவை ஏறக்குறைய ஒன்றுக்குப் பதில் இன்னொன்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. [2]இவ்வார்த்தைகள் தோற்றகாலத்தில் பார்வோனிடத்தில்

*பேசப்பட்டன* (யாத்திராகமம் 9:13, 16), ஆனால் இவைகள் எதிர்கால சந்ததிகளின் பிரயோஜனத்திற்காகப் பிற்பாடு *எழுதப்பட்டன* ("வேதம்" என்பது "எழுத்துக்கள்" என்று அர்த்தப்படுகிறது). [3]நீங்கள் பார்வோன் மற்றும் வனாந்தரத்தில் இஸ்ரவேல் மக்கள் என்பவற்றின் விவரிப்புகள் பற்றி, தேவன் இருதயத்தைக் கடினப் படுத்துதல் மற்றும் தமது திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இரக்கத்தைக் காண்பித்தல் என்பது மேம்போக்காகச் சிலரைப் பரலோகத் திற்கும் சிலரை நரகத்திற்கும் அனுப்புதல் அல்ல என்பதைக் குறிப்பிட விரும்பலாம். [4]இந்தக் குறிப்பு எனது NASB வேதாகமப் பிரதியில் காணப்படுகிறது. [5]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 311. [6]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 361. [7]*Anthropos* என்பது "மனிதன்" என்பதற்கான பொதுவான வார்த்தையாக உள்ளது, இது ஆண் மற்றும் பெண் ஆகியவர்களை உள்ளடக்குவதாகும். [8]மீண்டுமாக, நீங்கள் பவுலின் விவரிப்பானது நித்திய அழிவின்மீதல்ல ஆனால் பணியின்மீதே மையங்கொண்டுள்ளது என்பதை வலியுறுத்தத் தாமதிக்கக்கூடும். [9]கல்வியாளர்கள் இந்தப் பாத்திரங்களை "அழிவுக்கென்று தயாரித்தது" *யார்* என்பது பற்றிக் கலந்துரையாடுகின்றனர்: அந்தத் தனிநபர்களா, தேவனா, சாத்தானா அல்லது யார்? 23ம் வசனமானது *தேவன்* பாத்திரங்களை மகிமைக்கென்று எத்தனமாக்குதல் பற்றிப் பேசுவதால், 22ம் வசனத்தில் பவுல் அநேகமாக தேவனுடைய செயலைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம். இருப்பினும், நாம் காரணிகளின் ஒன்றிணைவு இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்கிறோம். உண்மைக்கருத்தில், தனிநபர்கள் தங்களுடைய வாழ்வினால் *தங்களைத் தாங்களே* பரலோகத்திற்கோ அல்லது நரகத்திற்கோ தயார்செய்து கொள்கின்றனர். [10]*ரோமருக்கு எழுதிய நிருபம், 2* என்ற புத்தகத்தில் "அவருடைய தீர்மானத்தின்படி (8:29, 30)" என்ற பாடத்தில், தேவனுடைய முன்னறிவு மீதான குறிப்புகளைக் காணவும்.

[11]பவுல் ரோமருக்கு நிருபத்தை எழுதிய வேளையில், சபையில் புறஜாதியார் யூதர்களைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையில் இருந்தனர். பெரும்பான்மையான யூதர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டிராத வேளையில், அந்த யூதர்கள் அவரை ஏற்றுக் கொண்டிருந்தனர். [12]KJV வேதாகமத்தில், "ஓசியா" என்பதற்குப் பதில் "ஓசே" என்றுள்ளது (வசனம் 25) மற்றும் "ஏசாயா" என்பதற்குப் பதில் "இசையாஸ்" என்றுள்ளது (வசனங்கள் 27, 29). KJV வேதாகமம், இவ்விரு தீர்க்கதரிசிகளினுடைய பெயர்களின் கிரேக்க வடிவங்களைப் பிரதிபலிக்கிறது. [13]ஏசாயா 10:23, தேவன் தாம் எதைச் செய்யப்போவதாகக் கூறுகிறாரோ அதைச் செய்வார் - மற்றும் அதைக்குறித்து அவர் தாமதமாயிருக்க மாட்டார் - என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. [14]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 522-23. நான் வாழும் பகுதியில், "remnant" ["மீதியாயிருப்பது"] என்ற வார்த்தையானது, ஒரு உடையைத் தைத்தபின்னர் எஞ்சியிருக்கும் துண்டுத் துணியைக் குறிப்பதாக உள்ளது. [15]"Sabaoth" என்பதை "Sabbath" என்பதாக நினைத்துக் குழப்பமடைய வேண்டாம். "Sabaoth" என்றால் "சேனைகள்" என்று அர்த்தப்படுகிறது, இது *படைகளைக்* குறிக்கிறது (McCord). NIV வேதாகமத்தில் இச்சொற்றொடர், "சர்வ வல்லமையுள்ள கர்த்தர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [16]C. E. B. Cranfield, *Romans: A Shorter Commentary* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 215. For other references to God's mercy, see Romans 11:30-32. [17]Morris, 345. [18]Walter W. Wessel, notes on Romans, *The NIV Study Bible,* ed. Kenneth Barker (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1985), 1720. [19]Richard A. Batey, *The Letter of Paul to the Romans,* The Living Word Commentary (Austin, Tex.: R. B. Sweet Co., 1969), 127.